152

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை–புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் சத்துணவு மையங்களுக்கான சில்லரைச் செலவினத்தினை (Contingency Expenditure) உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.4–2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.40

நாள் 30.04.2015.
திருவள்ளுவர் ஆண்டு 2046
மன்மத, சித்திரை 17

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.1444, சமூக நலத் துறை, நாள் 30.04.1984.

மீண்டும் படிக்க:-

2. சமூக நல ஆணையரின் கடித ந.க. எண்.11706/சஉதி–2/ 2015, நாள் 08.04.2015.

---

**ஆணை :-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 500 குழந்தைகளுக்கு குறைவாக பயனடைந்து வரும் சத்துணவு மையங்களுக்கு துடைப்பம், பினாயில், சோப்பு போன்ற பொருட்கள் வாங்குவதற்கென சில்லரைச் செலவினமாக மாதமொன்றுக்கு ₹20 வழங்கவும் மற்றும் 500 குழந்தைகளுக்கு அதிகமாக பயன்பெற்று வரும் மையங்களுக்கு மாதமொன்றுக்கு ₹30 வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்படி, சத்துணவு மையங்களுக்கு சில்லரைச் செலவினங்களுக்காக வழங்கப்பட்டுவரும் தொகை முப்பதாண்டுகளுக்கு மேல் நிர்ணயிக்கப்பட்டத் தொகையாகும். எனவே சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் தொகையினை மாதமொன்றுக்கு ₹20/30–லிருந்து ₹100 ஆக அனைத்து மையங்களுக்கும் உயர்த்தி வழங்கலாம் எனவும், அவ்வாறு உயர்த்தி வழங்கப்பட்டால் ஆண்டொன்றுக்கு ₹4.09 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும் என தெரிவித்து சத்துணவு மையங்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்பட்டுவரும் சில்லரைச் செலவித்தொகையினை ₹20/30 லிருந்து ₹100ஆக உயர்த்தி வழங்குமாறு சமூக நல ஆணையர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

//த.பி.பா.//

162

3. இந்நேர்வில், 06.04.2015 மற்றும் 08.04.2015 ஆகிய தினங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தினைத் தொடர்ந்து, 13.04.2015 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக் கல்வித் துறை) மற்றும் மாண்புமிகு அமைச்சர் (உயர் கல்வித் துறை) ஆகியோரது முன்னிலையில் சத்துணவு ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது இதர இனங்களுடன் சத்துணவு மையத்திற்கு தேவையான சில்லரை செலவினம் மாதம் ஒன்றிற்கு ₹50 ஆக உயர்த்தி வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

4. சமூக நல ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட்டுவரும் சில்லரைச் செலவினத் தொகையினை மாதமொன்றிற்கு தற்போது நடைமுறையிலுள்ள ₹20/30 தொகையிலிருந்து ₹50ஆக உயர்த்தி வழங்க ஆணையிடுகிறது. மேலும் இதற்காகும் கூடுதல் செலவினத்தைக் கணக்கிட்டு தேவைப்படும் நிதியினை பெறுவதற்கு உரிய கருத்துருவினை நிதித் துறைக்கு அனுப்புமாறு சமூக நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை – 32.
இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை – 113.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சமூக நல ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) (சமூக நல ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
தலைமைச் செயலாளரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சந (ம) சதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதித் (சமூக நலம்) துறை, சென்னை – 9.
முதன்மைச் செயலாளர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அவர்களின் தனி செயலர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.2/சந.7) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

163